**2020 ஆம் ஆண்டு மே மாதம் 29ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டப் பொருள்**

**முன்னிலை:- திரு.பு.ஸ்ரீபிரகாஷ்,**
**தனி அலுவலர் (பொ)**
**திண்டிவனம் நகராட்சி.**

1) நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு புனித அந்தோணியர் சுய உதவி குழு மூலம் நான்கு உறுப்பினர்கள் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் சுய உதவி குழு தொடர்ந்து கழிவறை சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளவும் 2020–2021 ஆண்டிற்கான ஊதிய செலவினம் ரூ.300000/– கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** பொது சுகாதார பணி அவசியம் கருதி கல்வி நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2914/2015/எச்1)

2) திண்டிவனம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIF)–2020 ன்கீழ் கீழ்கண்ட சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ரூபாய் 408.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட அறிக்கைக்கு உரிய நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்குமாறு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர்,வேலூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | சிப்பம் எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | I | வார்டு–1 ராஜகோபால் நகர், பிள்ளையார் கோயில் தெரு, வார்டு–5 அப்புகுட்டி தெரு, அய்யாசாமி தெரு, வார்டு–16 டிவி நகர், டிவி நகர் குறுக்கு தெருக்கள்,வகாப் நகர், வார்டு–20 காமராஜர் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி. | 106.00 |
| 2 | II | வார்டு–23 இந்திரா நகர் குறுக்கு தெரு, கற்பகவிநாயகர் கோயில் தெரு, வார்டு–24 முத்துகிருஷ்ணன் தெரு , வார்டு–25 பூதேரி ரோடு, வார்டு–26 பிள்ளையார் கோயில் தெரு, வார்டு–29 சர்க்கார் தோப்பு மற்றும் என்.ஜி.ஓ.காலனி ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி. | 100.00 |
| 3 | III | வார்டு–33 முஸ்லிம் தெரு, வார்டு–27 ஆர்.எஸ்.பிள்ளை தெரு, ஆர்.எஸ்.பிள்ளை குறுக்கு தெரு, உமர்சாகிப் தெரு,கசாமியான் தெரு, வார்டு–14 நேருவீதி பூந்தோட்டம், நேருவீதி பூந்தோட்டம் குறுக்கு தெரு, வார்டு–3 ரோஷணை ஆஸ்பிட்டல் மெயின்ரோடு, வார்டு–30 ராஜாங்குளம் இறக்கம் முதல் சஞ்சீவிராயன்பேட்டை மெயின் ரோடு வரை, வார்டு–11 வாணியபிள்ளையார் கோயில் தெரு,அப்பாய் தெரு மற்றும் வார்டு–13 கீரைக்கார தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி. | 105.00 |
| 4 | IV | வார்டு–15 மொட்டையன் தெரு, வார்டு–31 வசந்தபுரம் மெயின் ரோடு, வார்டு–8 பஜனை கோயில் தெரு, வார்டு–7 வேப்பஞ்சாலை தெரு, வார்டு–32 குட்டியப்பன் தெரு, வார்டு–4 ஆலன் தெரு(பாரதிதாசன் நகர்) ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைப்பது மற்றும் வார்டு–12 சேடன்குட்டை குறுக்கு தெரு ,வார்டு–26 பாரதிதாசன் பேட்டை ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி . | 97.00 |
| | | மொத்தம் | 408.00 |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதியளிக்கலாம்.

3) இந் நகராட்சியில் அனைத்துப் பிரிவுகளுமே கணினி மயமாக்கப்பட்டு விட்டது. அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் மற்றும் ரீ–Filling டோனர்கள் பயன்பாடு அதிகமாக உள்ளது. ஒவ்வொரு பிரிவுகளிலும் கணினியில் Typing செய்ததை Print எடுப்பதற்கும், சொத்து வரி, தொழில் வரி, கடை வாடகை மற்றும் குடிநீர் வரி அறிவிப்பு நோட்டீஸ்கள் பிரிண்ட் எடுப்பதற்கும் IHHL மற்றும் Animator's போன்ற பிரிவுகளில் டோனர் பயன்பாடு அதிகமாக உள்ளது. கொரானா பணிகளுக்கு தேவையான புள்ளி விவரங்களை எடுப்பதற்கும் டோனர் பயன்பாடு அதிகமாக உள்ளது. மேலும் உள்ளாட்சி தேர்தலும் நடைபெற உள்ளது. எனவே 2020–2021 ம் ஆண்டுக்கு தேவையான டோனர்கள் மற்றும் ரீ-Filling டோனர்கள் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் தேவைக்கேற்ப வாங்கிட அனுமதிக்கும், 2019–2020ல் சப்ளை செய்த G.தனசேகரன், ஆதவ் சொலுஷன், விழுப்புரம் நிறுவனம் பழைய விலை விகிதத்தில் சப்ளை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திடமே டோனர்கள் மற்றும் ரீ–Filling டோனர்கள் வாங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2297/2019/பி2)

4) திண்டிவனம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந் நகராட்சியில் 300–க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருவதால் பணியாளர்களின் உடல் வெப்ப நிலையை அறிய நான்கு வெப்ப நிலைமாணி கருவிகள் வாங்கி வழங்கலாம். அதற்கான தோராய செலவினம் ரூ.37000/– (ரூபாய் முப்பத்தி ஏழாயிரம் மட்டும்) செலவாகும். இச் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 15ன் கீழ் மேற்கொண்ட பணியினை விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.819–5/2020/எச்1)

5) இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகர மன்றத் தீர்மான எண். , நாள். ல் அனுமதித்துள்ளபடி, 12.05.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | ராஜாஜி தெரு, திருவள்ளுவர் தெரு, கம்பர் தெரு, மாரியம்மன் கோயில் தெரு மற்றும் வகாப் நகர் ஆகிய இடங்களில் சிறுபாலங்கள் அமைப்பது மற்றும் பெலாகுப்பம் ரோடு, காலிமான் கொல்லை தெரு ஆகிய இடங்களில் சேதமடைந்துள்ள கால்வாய்களை புதுப்பிக்கும் பணி | 800000/– | பி.முரளிமோகன் | –0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.ஆறுமுகம் | + 1.64 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி.முரளிமோகன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

6) இந் நகராட்சி வார்டு 25 பூதேரி பகுதியில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் இணைப்பு வழங்க ஏற்கனவே உள்ள பி.வி.சி பகிர்மான குழாய்கள் சேதமடைந்து சீரான குடிநீர் விநியோகம் இல்லாததாலும் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய் பதிக்கும் பணி இல்லாததாலும் பூதேரி பிள்ளையார் கோயில் தெரு, நடுத் தெரு மற்றும் வடக்கு தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக 110 mm & 90 mm PVC பகிர்மான குழாய் பதிக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

7) இந் நகராட்சி பகுதியில் உள்ள சிறு மின் விசை மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.5,00,000/–க்கு செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**8)** இந் நகராட்சிக்கு சொந்தமான நீரேற்று நிலையங்களில் போதிய மழையின்மை மற்றும் வறட்சி காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்து அதனால் குறைந்த அளவு குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் திண்டிவனம் நகர பகுதியிலும் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து அதனால் குடிநீர் அல்லாத மற்ற தேவைகளுக்கான தண்ணீருக்கும் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. எனவே வடகிழக்கு பருவ மழை பெய்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து போதுமான அளவு குடிநீர் சப்ளை செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூபாய் **10.00** இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**9)**இந் நகராட்சி அவரப்பாக்கம் பகுதியில் நுண்ணிய உரக்கிடங்கு மையம் அமைந்துள்ளது. மேலும் அருகிலுள்ள பொது மக்கள் துர்நாற்றம் வீசுவதாக புகார் தெரிவித்துள்ளனர். அந்த நுண்ணிய உரக்கிடங்கில் துர்நாற்றம் வீசுவதாக புகார் தெரிவித்துள்ளனர். அந்த நுண்ணிய உரக்கிடங்கில் துர்நாற்றம் வீசாதவாறு வீடுகள் பக்கத்திலும் மற்றும் **4** உரக்கிடங்கு மையங்களிலும் உரங்களை வெளியில் உலா வைப்பதற்கும் GI Sheet Shed அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.**1,50,000/—**க்கும் நகராட்சி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**10)** இந் நகராட்சி வார்டு **32** காதர் உசேன் தெருவில் போதிய வடிக்கால் வசதி இல்லாததால் கழிவுநீர் சாலையில் தேங்கி நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பொது மக்கள்நலன் கருதி புதியதாக கால்வாய் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.**5,00,000/—**க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**11)**இந் நகராட்சி வார்டு **28** சுப்ரமணிய கோயில் தெருவில் காய்கறி கடை வியாபாரிகள் சாலை வரை ஆக்கிரமித்து கடை வைத்துள்ளார்கள். மேற்படி பகுதியில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகியோரின் நேரடி ஆய்வில் ஆக்கிரமிப்பு கடைகளை அப்புறப்படுத்தி வடிக்கால்வாய் மற்றும் சாலையின் இருபுறமும் பிளாட்பார்ம் மேல் தரை ஓடுகள் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை செய்யவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.**9,80,000/—**க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**12)**இந் நகராட்சி வார்டு **33**ல் அமைந்துள்ள ரோஷணை இந்து ஆரம்ப பள்ளி கட்டிடம் மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே மாணவர்களின் நலன் கருதி புதிய கட்டிடம் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.**9,90,000/—**க்கும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

13) இந் நகராட்சி வெள்ளவாரி வாய்க்காலில் காலிமான் கொல்லை பகுதி மக்கள் அசுதப்படுத்தியும் மற்றும் குப்பைகளையும் கொட்டி வருவதால் தண்ணீர் செல்லாமல் தேங்கி நிற்கிறது. எனவே வெள்ளவாரி வாய்க்கால் இருபுறமும் கம்பிகள் மூலம் பென்சிங் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.5,00,000/—க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

14) இந் நகராட்சி வார்டு 12 & 13 முத்துசெட்டி தெரு மற்றும் ரொட்டிக்கார தெருவில் சிறுபாலம் மற்றும் கால்வாய் சேதமடைந்து உள்ளதால் புதியதாக சிறுபாலம் மற்றும் கால்வாய் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.8,50,000/—க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

15) இந் நகராட்சி வார்டு 5 அய்யாசாமி தெருவில் சிறுபாலம் சேதமடைந்து உள்ளதாலும் மற்றும் கால்வாய் வசதி இல்லாததாலும் புதியதாக சிறுபாலம் மற்றும் கால்வாய் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.3,50,000/—க்கு செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

16) இந் நகராட்சி சலவாதி சாலையில் அமைந்துள்ள இரண்டு உரக்கிடங்கு மையத்தின் உரக்கிடங்கு காவலர் கட்டிடம் சில ஆண்டுகளுக்கு முன் எரிந்து பழுதடைந்துள்ளது. அந்த கட்டிடத்தில் தரை ஓடுகள், பூச்சு வேலை, தண்ணீர் வசதி, கழிவறை வசதி, வண்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு உரக்கிடங்கு காவலர் கட்டித்தை புனரமைத்து பயன்படுத்தவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.3,50,000/—க்கு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

17) கோட்டப் பொறியாளர் (நெ) கட்டிட (ம) பராமரிப்பு விழுப்புரம் அவர்களின் ந.க.எண். 672/2020/அ1. நாள். 23.03.2020 கடிதத்துடன் தொகை ரூ.53088/—க்கான காசோலை சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் மேற்படி துறைக்கு இந் நகராட்சியால் செலுத்த வேண்டிய நிலுவை ரூ.45208/— மட்டுமே இருந்த காரணத்தால் கீழ்க்கண்டுள்ள விவரப்படி அத் தொகை வரவு வைக்கப்பட்டது.

| வ.எண் | வரி விதிப்பு எண் | சொத்துவரி தொகை | குடிநீர் கட்டணம் | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 043/11612 | 12676 | — | 12676 |
| 2 | 043/11616 | 28260 | — | 28260 |
| 3 | 043/01 | — | 1824 | 1824 |
| 4 | 043/59 | — | 1824 | 1824 |
| 5 | 043/1895 | — | 624 | 624 |
| | | | | 45208/— |

மேலும் உதவி கோட்ட பொறியாளர் (நெ)கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கடிதம் ந.க.எண். 50/2020/அ1. நாள். 18.05.2020 கடிதத்தில் மேற்படி கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.7880/ஐ திரும்ப வழங்க கோரப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை ரூ.7880/— மேற்படி கோட்டப் பொறியாளருக்கு திரும்ப வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u> மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1112/2020/அ2)

18) திண்டிவனம் நகரம் திரு.அய்யப்பன், செல்வகுமார், ஏகாம்பரம் என்பவர்களால் திண்டிவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No. 89/2018 –ல் சந்தைமேடு பகுதியில் சாலையோர வியாபாரிகளுக்கு கடை வைக்க இடம் ஒதுக்கீடு செய்ய தடையுத்தரவு கோரி திண்டிவனம் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் IA No.290/2018 –in OS No.89/2018 –ன் 06.04.2018 தேதியில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னர் திண்டிவனம் நகராட்சி சார்பில் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால தடை உத்திரவு நீக்கம் செய்யப்பட்டது. பின்னர் நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களின் 20.04.2020 தேதிய கடிதத்தில் மேற்காணும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், தீர்ப்பாணை நகலினை இணைத்தும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.12,000/– வழங்கவும் தெரிவித்துள்ளார். அன்னாருக்கு மேற்காணும் வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.12,000/–வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1312/2018/எப்1)

**நகராட்சி அலுவலகம்** — **தனி அலுவலர் (பொ) மற்றும் ஆணையாளர்(பொ)**

**நாள்:- 29.05.2020** — **திண்டிவனம் நகராட்சி.**